

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | நவம்பர் 05, 2020 | புரட்சி 19 | முழக்கம் 15 | விலை: ரூ.3.00

## அதிரடி யாத்திரை

பா.ஜ.க.வில் உறுப்பினராகி முடிந்து விட்டதா? உடனடியாக அதிரடியாக எதையாவது செய்து காட்டியாக வேண்டும்! அப்போதுதான் ஒழுங்காகவே செய்கிறார்கள் என்று கட்சித் தலைமை நம்பும். மத நம்பிக்கைகள்கூட ஒரு பக்கம் கிடக்கட்டும்; அந்த நம்பிக்கை யாருக்கு வேணும்? கட்சியின் நம்பிக்கைதான் முக்கியம். சில நேரங்களில் இந்த 'அதிரடிகள்' குழிபறித்து விடுவதும் உண்டு.

'சாரணர் தேர்தல் புகழ்' – எச். ராஜாவைப் பாருங்கள்! அவர் பெரியாரை, திராவிட இயக்கத்தினரை, வைர முத்துவை, கனிமொழியை – இன்னும் பெயர் நினைவுக்கு வரவில்லை; அத்தனை பேரையும் அதிரடியாக 'மனு சாஸ்திர' நடையில் (அதாவது எழுத்தில் எழுத முடியாத வகையில்) தாக்கினார். வாயைத் திறந்தாலே 'ஆன்டி இந்தியன்' என்பார். இப்போது – அதிரடியாகக் காணாமல் போய் விட்டார். ஏற்கனவே இருந்த பதவியும் பறி போனது!

அதேபோல குஷ்புவும் அதிரடியில் இறங்கினார். 'திருமாவளவனைக் கைது செய்' என்று சிதம்பரம் நோக்கி சுமார் 12,000 தொண்டர்களுடன் (அதாவது ஒரு தொண்டர் ஆயிரம் பேருக்கு சமம்) கிழக்கு கடற்கரை வழியாக காரில் 'யாத்திரைப் பயணம்' புறப்பட்டார். சிதம்பரம் போய்ச் சேர வேண்டியவரை புறப்பட்ட 30 நிமிடங்களிலே காவல்துறை தடுத்து, ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் ஓய்வு விடுதியில் தங்க வைத்து, பிறகு மாலை வீட்டுக்கு அனுப்பி வைத்தது. குஷ்பு எப்போது எந்நேரத்தில் புறப்படுகிறார் என்பதோ, காவல்துறை, எந்த இடத்தில் அதிரடியாக தடுக்கும் என்பதோ, எங்கே தங்க வைக்க ஏற்கனவே ஏற்பாடுகள் அதிரடியாக செய்து முடித்தது என்பதோ 'அதிரடி'யாக களமிறங்கிய குஷ்புக்கும் தெரியாது; காவல்துறைக்கும் தெரியாது என்று நம்புவோமாக!

'நான் மனு சாஸ்திரத்தை மதவாத அரசியலை ஆதரிக்கும் பெரியாரிஸ்ட்' என்று அதிரடியாக அறிவிக்கிறார் குஷ்பு! அடுத்தகட்டமாக 'நான் பா.ஜ.க.வை, மோடியை எதிர்க்கும் தீவிர பா.ஜ.க. உறுப்பினர்' என்ற அதிரடி அறிவிப்பை எப்போது நாட்டுக்குக் கூறப் போகிறார் என்பது நமக்குத் தெரியாது.

அடுத்த கட்டமாக பா.ஜ.க.வின் தலைவர் முருகன், பாதயாத்திரைக்கு அதிரடியாக தயாராகி வருகிறாராம். அதற்கு 'வேல் யாத்திரை' என்று பெயர். தமிழ்க் கடவுள் முருகனின் சின்னத்தோடு 'வேல் வேல்; முருகன் வேல்; ஒழிக ஒழிக தி.மு.க. ஒழிக!" என்ற பக்திப் பரவச முழக்கங்களோடு நடக்கப் போகிறது இந்த யாத்திரை!

யாத்திரை துவங்கும் இடம் அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி! பா.ஜ.க.வின் தலைவர் என்ற அதிகாரத்துடன் முருகன் கர்ப்பகிரகத்துக்குள் அதிரடியாக நுழைந்து, 'தமிழில் உன்னை வழிபட்டு தமிழ்நாட்டைக் காப்பாற்றப் புறப்படுகிறேன் முருகா' என்று வேண்டு வாரா, என்று கேட்கிறார் தமிழ்க் கடவுளை நேசிக்கும் தமிழனான ஒரு முருக பக்தர். இது பா.ஜ.க.. முருகனுக்கும் திருத்தணி முருகனுக்கும் இடையிலான ஒரு பிரச்சினை.

ஆனால், ஒன்று மட்டும் நமக்குத் தெரியும். இந்த வேல் யாத்திரையில் ஒவ்வொருவர் கையிலும் முருகன் வேல் இருக்கும். யாத்திரை வாசிகள் தாமரைப் படம் போட்ட துண்டுடன் பக்தி கோலத்துடன் காட்சியளிப்பார்கள். மக்களிடம் பக்திப் பரவசத்தை உருவாக்க நீண்ட ஆன்மிக சொற்பொழிவுகளை நிகழ்த்தக் கூடும். சொற்பொழிவுகள் எப்படி இருக்கும்?

"தமிழக பா.ஜக. பலமடைந்து வருகிறது முருகா; அடுத்தடுத்து இன்னும் பல நடிகர்கள் இணையப் போகிறார்கள் முருகா; இனி ஸ்டாலின் முதல்வராக வேண்டும் என்று கனவுகூட காண முடியாது முருகா. தி.மு.க. கூட்டணி உடையப் போகிறது முருகா; காங்கிரஸ் கட்சி, மிரண்டு போய் நிற்கிறது முருகா; கருப்பர் கூட்டத்தைச் சார்ந்த தற்போது சிறையில் அடைக்கப் பட்டுள்ள 2 பேர் வழிகள்தான் தி.மு.க. கூட்டணியையே பின்னாலிருந்து இயக்கிக் கொண்டிருக்கிறார்கள் முருகா; தி.மு.க.வோ சமூக நீதி, இடஒதுக்கீடு, மக்கள் பிரச்சினை என்றெல்லாம் பக்தியே இல்லாத அற்பப் பிரச்சினைகளைப் பேசி அரசியல் நடத்துகிறது முருகா; நாங்கள் மட்டுமே தி.மு.க.வையும் கூட்டணியையும் தோற்கடிக்க பக்தி உலா வருகிறோம் முருகா." அரோகரா, முருகனுக்கு அரோகரா, தி.மு.க. ஒழிய வரந் தருவாய் முருகா என்ற முழக்கத்துடன் ஆன்மிக 'உபந்நியாசத்தை' நிறைவு செய்வார்கள்.

யார் யாரோ 'அதிரடி'களை அக்கட்சியில் நிகழ்த்தும் போது கட்சித் தலைவருக்கு மட்டும் அந்த உரிமை இல்லாமல் போய்விடுமா?

போடு; கந்தனுக்கு வேல்! வேல்! பா.ஜ.கவுக்கு வேல்! வேல்! அரோகரா!

**– கோடங்குடி மாரிமுத்து**

### பல்வேறு பகுதிகளில் உணர்வுடன் நடந்தது

# தமிழ்நாடு விழா கொண்டாட்டங்கள்

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் தமிழ்நாடு கொடி அறிமுக நிகழ்வு, 20.10.2020 அன்று காலை 10 மணியளவில் பத்திரிக்கையாளர் சங்கத்தில் நடைபெற்றது.

நிகழ்வில், பொழிலன் (பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப் பாளர்), கவிஞர் கலி. பூங்குன்றன் (திராவிடர் கழகத் துணைத் தலைவர்), திருமுருகன் காந்தி (மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர்), குடந்தை அரசன் (தலைவர், விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சி), நாகை திருவள்ளுவன் (தலைவர், தமிழ்ப்புலிகள் கட்சி), வெண்மணி (தலைவர், திராவிடத் தமிழர் கட்சி), சேக் முகமது அலி (மனிதநேய மக்கள் கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர்), தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்), குமரன் (தந்தை பெரியார் திராவிடர் கழகம் சென்னை மாவட்டத் தலைவர்), முத்தமிழ் (மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி), செல்வமணி (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), தம்பி மண்டேலா (மக்கள் குடியரசுக் கழகம்), காசு நாகராசன் (தமிழ்நாடு திராவிடர் கழகம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்விற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு 30.10.2020 மாலை 6 மணிக்கு மேல் காவல் துறையிடம் இருந்து கொடி ஏற்றுவதற்கு அனுமதி மறுப்பு கடிதங்கள் வழங்கப்பட்டன. சென்னை, சேலம், மேட்டூர், பொள்ளாச்சி, திண்டுக்கல், ஈரோடு, குமாரபாளையம், பள்ளிபாளையம், தர்மபுரி, செங்கல் பட்டு ஆகிய பகுதி திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட பொறுப்பாளர்களிடம் மறுப்பு கடிதங்கள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு விழா கொண்டாடுவதற்கான அறிவிப்புகளை தமிழக முதலமைச்சர் ஒருபுறம் வெளியிட்டு விட்டு, மறுபுறம் காவல் துறையால் தமிழ்நாடு விழா கொண்டாட தடைகளும் வழங்கப் பட்டன.

01.11.2020 அன்று சென்னை, சேலம், மதுரை, மேட்டூர், பொள்ளாச்சி, திருப்பூர், திருச்சி ஆகிய பகுதிகளில் திராவிடர் விடுதலைக் கழகம் ஒருங்கிணைப்பில், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக தமிழ்நாடு விழா கொண் டாடப்பட்டது. சென்னையில், இராயப்பேட்டை வி.எம். தெருவில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. தமிழ்நாடு விழா கொண் டாட்டத்தை விளக்கி மாவட்ட செயலாளர் உமாபதி உரையாற்றினார். 50க்கும் மேற்பட்ட தோழர்கள் வாகனங்களில் ஊர்வலமாக சென்று மந்தைவெளி பெரியார் படிப்பகத்தில் தமிழ்நாடு விழாவை கொண்டாடினர். தமிழ்நாட்டின் உரிமை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இனிப்புகளும் வழங்கப்பட்டன. அந்நிகழ்வில் தலைமைச் செயலாளர் தபசி குமரனும் கலந்து கொண்டார்.

மதுரையில், நவம்பர் 1, காலை 10 மணி யளவில் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக தமுக்கம், தமிழன்னை சிலை முன்பு 70க்கும் மேற்பட்ட தோழர்கள் ஒன்று கூடி தமிழ்நாடு நாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மதுரை மாவட்டச் செயலாளர் மா.பா. மணியமுதன், காமாட்சிப் பாண்டி ஆகியோரும் கலந்து கொண்டனர். ஒன்று கூடிய தோழர்கள் கைது செய்யப்பட்டு மாலை 7 மணியளவில் விடுவிக்கப்பட்டனர்.

திருப்பூர் மாவட்ட பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் 01.11.2020 ஞாயிறு காலை 11.00 மணியளவில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா சிலை முன்பு எழுச்சி முழக்கங்களுடன் கொண்டாடப்பட்டது. திராவிடர் விடுதலைக் கழக மாவட்டத் தலைவர் முகில் இராசு தலைமையில் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

சேலம், நகரத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், மாவட்ட செயலாளர் டேவிட் தலைமையில் தோழர்கள் ஒன்று கூடி பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து தமிழ்நாடு நாளை கொண்டாடினர். பொள்ளாச்சியில், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக கா.கபுதூரில் காலை 9 மணியளவில் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்நாடு திராவிடர் கழகம், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை ஆகிய அமைப்புத் தோழர்கள் பங்கேற்றனர். நவம்பர் 1 மாலை 4:30 மணியளவில் மேட்டூர் பேருந்து நிலையம் எதிரில் சேலம் மேற்கு மாவட்டம் சார்பில் தமிழ்நாடு விழா கொண்டாடப்பட்டது.

நிகழ்விற்கு மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார், தலைமைக்குழு உறுப்பினர் ஆர்.எஸ் சக்தி, காவை ஈஸ்வரன் உட்பட காவலாண்டியூர், மேட்டூர், கொளத்தூர், ஆர்.எஸ் பகுதிகளைச் சேர்ந்த 60ற்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. திருச்சியில் காலை 10 மணியளவில் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக தமிழ்நாடு விழா கொண்டாடப்பட்டது.

ஈரோட்டில், திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் விழா கொண்டாடுவதற்கு காவல்துறை எதிர்ப்பு தெரிவித்தது. இந்நிலையில் திராவிடர் விடுதலைக் கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி காவல்துறையால் கைது செய்யப்பட்டு பின் விடுவிக்கப்பட்டார்.

### அரசு அறிவித்த விழாவைக் கொண்டாடுவது 'தேசத் துரோகமா?'

# பொழிலன் உள்ளிட்ட 15 தோழர்களை விடுதலை செய்க!



தமிழ்நாடு உருவான நவம்பர் ஒன்றாம் நாள் தமிழ்நாடு நாளாக அரசு விழா எடுத்து கொண்டாடி வரும் வேளையில், தமிழ்நாடு நாள் விழா மற்றும் தமிழ்நாட்டு கொடி ஏற்றியதற்காக தமிழக மக்கள் முன்னனியின் தலைவரும், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான தோழர் பொழிலன், தோழர் ஜான் மண்டேலா ஆகியோர் செங்கற்பட்டு சிறையிலும் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தோழர்கள் (ஏசு) ச.குமார், சு.நாகேந்திரன், சு.செல்வம் மற்றும் வட சென்னையைச் சேர்ந்த தோழர்கள் சேகர் (எம்.ஆர்.எப்.), ஆ.பாரத்குமார், அ.லோகநாதன், கு.பார்த்திபன், மு.சதிஷ், சு.சுரேஷ், சு.முரளி, இரா.அண்ணாதுரை, பு.சந்தோஷ், சி.வீரன் ஆகியோரை 124-A உள்ளிட்ட பல பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து, [illegible] சிறையிலும் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். பாஜக- அதிமுக அரசுகளின் இந்த அடக்குமுறையை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

ஒருபக்கம் தமிழ்நாடு நாள் விழாவை அரசு விழா என்று கூறி, தலைமைச்செயலகத்தை வண்ண விளக்குகளால் அலங்கரித்து, தமிழ் மக்களுக்கு வாழ்த்து கூறி சிறப்பாக கொண்டாடினாலும், மறுபக்கம் அதே விழாவை சிறப்பாக கொண்டாட முயன்றவர்களை கைது செய்துள்ளது. இது, தமிழ்நாடு அரசு உண்மையிலேயே தனித்த இறையாண்மை கொண்ட தமிழ்நாடு அரசாக செயல்படுகிறதா, இல்லை பாஜகவின் பினாமி அரசாக செயல்படுகிறதா என்ற ஐயத்தை நமக்குள் எழுப்புகிறது.

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

# மாமனிதரின் நூற்றாண்டு (1920-2020)

கோச்சரி இராம நாராயணன் எனும் கே.ஆர். நாராயணன் நூற்றாண்டு இது. குடியரசு துணைத் தலைவராக இருந்து குடியரசுத் தலைவராக உயர்ந்தவர். போட்டியில் எதிர்த்து களத்தில் நின்ற முன்னாள் தலைமை தேர்தல் அதிகாரியும் சங்கராச்சாரி சீடருமான சேஷன், 5 சதவீத ஓட்டுகளை மட்டுமே பெற்று தோல்வி அடைந்தபோது ஆத்திரத்தின் உச்சிக்கே சென்று இவ்வாறு கூறினார்: “இந்தத் தோல்வி எனக்கு அவமானம்; உயர்ஜாதிக்காரர்கள் உருவாக்கித் தந்த சட்டத்தால் கிடைத்த ‘தலித்’ அடையாளம் தான் அவரை வெற்றி பெற வைத்துள்ளது”. ஆனால் கே.ஆர். நாராயணன் அவர்களின் அடையாளம் அது மட்டும் தானா? அதையும் தாண்டிய உயரிய விழுமியங்களால் குடியரசுத் தலைவர் பதவிக்கு பெருமை சேர்த்தவர். அரசியலில் காங்கிரஸ் கட்சியை ஏற்றவர். நாடுகளுக்கான உறவுகளை வெற்றிகரமாக கையாளக் கூடிய தூதர் பதவிகளில் இருந்தவர். மூன்று முறை காங்கிரஸ் கட்சியின் சார்பில் கேரளாவில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தேர்வு பெற்றவர்.

மண் குடிசை ஒன்றில் பட்டியல் இனப் பிரிவுகளிலேயே தர வரிசையில் கடைசி இடம் பெற்றிருந்த ‘கோரி’, வகுப்பில் பிறந்து, வெளிநாடு சென்று உயர் கல்வி பெறும் தகுதிக்கு தன்னை உயர்த்திக் கொண்டவர். ஆதரவுக் கரங்களும் அவருக்காக நீண்டன. 1992-1997 வரை குடியரசு துணைத் தலைவராகவும் 1997-2002 ஆம் ஆண்டு காலத்தில் குடியரசுத் தலைவராகவும் இருந்தார். அந்தப் பதவிக்கு பெருமை சேர்த்த முதல் தலித். அவர் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்ற காலம் ஒற்றைக் கட்சி ஆட்சி முடிவுக்கு வந்து அய்க்கிய முன்னணி என்ற கூட்டணி கட்சிகள் அதிகாரத்துக்கு வந்த காலம். இந்தியாவின் பன்முகத் தன்மையை அங்கீகரிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் முதன்முறையாக தலித் சமூகத்தில் பிறந்த இவரை குடியரசுத் தலைவராக்க வேண்டும் என்ற சிந்தனையும் உதித்தது.


கே.ஆர். நாராயணன்

நாடாளுமன்றத்தின் பொன் விழா சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றும் அந்த வரலாற்றுத் தருணத்தைப் பயன்படுத்தி சமூக ஜனநாயகம் – சமூக நீதி என்ற இரண்டு கோட்பாடுகள் தான் அரசியல் சட்டத்தில் இழையோடிக் கொண்டிருக்கும் உயிர்த் துடிப்பு என்பதை உறுதியுடன் நாட்டுக்கு அறிவித்தவர். மிகச் சிறந்த ஆளுமைக்கும் கல்வித் தகுதிக்கும் ஆட்படுத்திக் கொண்டிருந்த அவரை உயர்ஜாதியினர் பூணூல் அணிவித்து உயர்ஜாதியாக ஏற்க முன் வந்தபோது ‘எனது அடையாளம் சமூக ஜனநாயகம்’ என்று கூறி வேண்டுகோளை புறந்தள்ளினார். அவர் ஒரு அறிவியல்பூர்வமான சமூகப் போராளி. அந்தக் காலகட்டங்களில் தமிழகம் வரும் குடியரசுத் தலைவர்கள் காஞ்சி சங்கரமடம் போய் ‘ஆசி’ பெறுவதை வழக்கமாகவும், கட்டாயமாகவுமாக ஆக்கிக் கொண்டிருந்த நிலையில் அந்த மடத்தின் பக்கம் பதவிக் காலம் முழுதும் திரும்பிப் பார்க்காதவர்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தின் ஒப்புதலுக்காக தலைமை நீதிபதி அனுப்பியப் பட்டியலைப் பார்த்து மனம் பதைத்து ஒப்புதல் தராமல் திருப்பி அனுப்பினார். இந்தப் பட்டியலில் பட்டியல் இனப் பிரிவு, பெண்கள், மைனாரிட்டியினருக்கு பிரதிநிதித்துவம் தரப்படாததை சுட்டிக் காட்டினார். “நீதித் துறைகளில் இடஒதுக்கீடு கொள்கையை அமுல்படுத்துவது இல்லை” என்று தலைமை நீதிபதியிடமிருந்து பதில் வந்தது. ‘அது எனக்கும் தெரியும்’. நான் கேட்பது இடஒதுக்கீடு இல்லை; பிரதிநிதித்துவம்” என்று பதில் எழுதினார்.

மோடி, குஜராத் முதல்வராக இருந்த 2002இல்தான் படுமோசமான இஸ்லாமிய இனப்படுகொலை நடந்தது. வாஜ்பாய் பிரதமர். அவரே இந்தப் படுகொலைகளுக்காக முகம் சுளித்தார். அப்போது குஜராத்துக்கு உடனே இராணுவத்தை அனுப்பி கலவரத்தை அடங்குங்கள் என்று துணிவுடன் வாஜ்பாயிடம் வலியுறுத்தியவர் கே.ஆர். நாராயணன். கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களையும் தலைநகருக்கு தப்பி வந்தவர்களையும் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு அழைத்து ஆறுதல் கூறினார். ‘எச்.அய்.வி.’ நோய் பாதிப்புக்குள்ளானவர்களை சமூகமே விலக்கி வைத்த காலத்தில் குடியரசு துணைத் தலைவராக இருந்த நிலையில் அந்த மனிதரை அழைத்து கைகுலுக்கியவர். இந்த மனித நேயம் உலகையே அவரைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

பாபர் மசூதியை மதவெறி சக்திகள் இடித்துத் தள்ளியபோது மவுனம் காக்கவில்லை. காந்தியார் கொலையைவிட கொடூரமானது என்று எதிர்ப்பைப் பதிவு செய்தார். கருத்துரிமையை மதித்தவர். அவர் துருக்கி நாட்டுக்கான இந்தியாவின் தூதராக இருந்தபோதுதான் அந்த நாட்டில் ‘பகவத் கீதை’ நூலுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க வைத்தார்.

அரசுகள் ஆணைப்படி ஆளுநர்கள் தயாரிக்கும் அறிக்கைகளை அப்படியே கண்களை மூடிக் கொண்டு ஒப்புதல் தரும் குடியரசுத் தலைவராக அவர் செயல்படவில்லை. தன்னை ‘செயல்படும் குடியரசுத் தலைவர்’ (working President) என்றே அழைத்துக் கொண்டார்.

அய்.கே. குஜ்ரால் பிரதமராக இருந்தபோது உ.பி. மாநிலத்தில் கல்யாண் சிங் தலைமையில் நடந்த மாநில ஆட்சியை 356ஆவது பிரிவின் கீழ் கலைக்கும் பரிந்துரையை மாநில ஆளுநர் ரமேஷ் பண்டாரி குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார். முதன் முறையாக குடியரசுத் தலைவர் வரலாற்றிலேயே ஒப்புதல் தர மறுத்து விட்டார். மத்திய மாநில உறவுகளைக் குறித்து ஆராய்ந்த சர்க்காரியா ஆணையத்தின் பரிந்துரைகளையும், ‘பொம்மை’ வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளையும் பரிசீலிக்குமாறு கோப்பை அமைச்சரவைக்கு திருப்பி அனுப்பினார். இதை பிரதமர் அய்.கே. குஜ்ரால் தனது சுயசரிதையில் பெருமையுடன் பதிவு செய்துள்ளார்.

மற்றொரு முக்கிய நிகழ்வு 2001ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடந்ததாகும். முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, கலைஞர் கருணாநிதி அவர்களை வலுக்கட்டாயமாக அவரது வீடு புகுந்து நள்ளிரவில் கைது செய்த கொடூரமான மனித நேயத்துக்கும் சட்டத்துக்கும் சவால் விடுக்கும் அத்துமீறல் நடந்த நேரம். மத்தியில் அமைச்சராக இருந்த தி.மு.க.வினரும் இதேபோல் வலுக்கட்டாயமாக கைது செய்யப் பட்டார்கள். (முரசொலி மாறன் மற்றும் டி.ஆர். பாலு) தொலைக்காட்சி வழியாக நேரில் பார்த்த அவர், உடனடியாக வாஜ்பாயிடம் தொடர்பு கொண்டு ஆளுநரிடம் அறிக்கை கேட்க உத்தரவிட்டார். அப்படியே ஆளுநர் பாத்திமா பீவியிடம் விளக்கமும் கேட்கப்பட்டது. பதில் திருப்தி தராத காரணத்தால் ஆளுநர் திருப்பி அழைக்கப்பட்டார்.

1999ஆம் ஆண்டு வாஜ்பாய் ஆட்சி நம்பிக்கை வாக்கெடுப்பில் ஒரே ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோற்றுப் போனது. ஆட்சிக் கவிழ்ப்புக்கு சதி செய்தவர்கள் சோனியா, ஜெயலலிதா மற்றும் சுப்ரமணியசாமி. நாடு மற்றொரு தேர்தலை சந்திக்காமல் தடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார் கே.ஆர். நாராயணன். பா.ஜ.க. அல்லாத கட்சியின் பிரதிநிதிகளை நாடாளு மன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசி மேற்கு வங்க முதல்வராக இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த ஜோதி பாசுவை பிரதமராக்க லாம் என்ற ஆலோசனையை முன் வைத்தார். காங்கிரசிலிருந்த பார்ப்பனர்களான பிரணாப் முகர்ஜி, எம்.எல். பொட்டேடார் போன் றவர்கள் ஒரு கம்யூனிஸ்ட்டை முதல்வராக்குவதா என்று கடுமையாக எதிர்த்தனர். ஜோதிபாசு பிரதமராகியிருந்தால், வாஜ்பாய் இரண்டாவது முறையாக பிரதமர் பதவிக்கு வந்திருக்கவும் முடியாது. குஜராத் இனப் படுகொலை யும் மோடி ஆட்சியில் நடந்திருக்கவும் முடியாது. (இந்த தகவல்களுக்கு ஆதாரம் : ‘ஹரீஷ்காரே’ இந்து ஆங்கில நாளேட்டில், அக். 27, 2020 இல் எழுதிய கட்டுரை)

உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி தந்த ஆலோசனைப்படி கலைஞர் முதல்வராக இருந்தபோது ‘பொடா’ என்ற மற்றொரு ‘தடா’ சட்டத்தை தமிழ்நாட்டுக்கு மட்டும் நிறைவேற்றி குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பியபோது ஒப்புதல் தராமல் திருப்பி விட்டவர் கே.ஆர். நாராயணன்.

‘இந்துத்துவா’ அரசியல் கோட்பாட்டை உருவாக்கிய சாவர்க்கருக்கு பாரத ரத்னா பட்டத்துக்கு பிரதமர் வாஜ்பாய் ஒப்புதல் தர எழுதிய கடிதத்தைக் கிடப்பில் போட்டார். தூக்குத் தண்டனைக்கு ஒப்புதல் கேட்டு வந்த எந்தக் கடிதத்துக்கும் பதில் அளிக்காமல் கிடப்பில் போட்ட பெருமைக்குரியவர். அவர் பதவி காலத்தில் ஒருவருக்குக்கூட தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டதில்லை. சென்னை அய்.அய்.டி.யில் படித்து அமெரிக்காவில் பெரும் செல்வத்துடன் வாழும் ஒரு பார்ப்பன மாணவர் அய்.அய்.டி.க்கு ரூ.2 கோடி நன்கொடை வழங்கினார், அதற்காக அவருக்கு முனைவர் பட்டம் வழங்க அய்.அய்.டி. இயக்குனர் தந்த பரிந்துரையை பணத்துக்காகப் பட்டத்தை விற்க முடியாது என்று ஏற்க மறுத்தவர்.

வரலாற்றில் நேர்மையாலும் அறிவுத் திறனாலும் தாங்கள் வகித்த உயர் பதவிகளுக்கு பெருமை தேடித் தந்த மாபெரும் மனிதர்களை மனுதர்ம பாசிச சிந்தனையில் மூழ்கிக் கிடக்கும் ஊடகங்களும் மக்களின் பொதுப் புத்தியும் எப்போதுமே கவுரவிப்பதற்கோ, பெருமை செய்வதற்கோ தயாராக இல்லை. காரணம் அவர்கள் பிறந்த ஒடுக்கப்பட்ட சமுதாயமே இதற்கு தடைக்கல்லாக வந்து நிற்கிறது.

ஆனாலும், வரலாறுகள் உண்மைகளைத் திரையிட்டு நிரந்தரமாக மறைத்து விடவே முடியாது!

வாழ்க மாமனிதர் வரலாற்று நாயகர் கே.ஆர். நாராயணன்!

– புரட்சிப் பெரியார் முழக்கம் 05.11.2020

# சாவர்க்கர் – கோல்வாக்கர் வரவேற்ற மனுஸ்மிருதி

‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (நவம்பர் 2, 2020), குஷ்பு, வி.சி.க. தலைவர் திருமாவளவனை கைது செய்ய வேண்டும் என்று போராடுவது குறித்து மனு சாஸ்திரத்தை முன் வைத்து ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அருண் ராம் என்பவர் எழுதியுள்ளார். இப் பிரச்சினைக்குப் பிறகு மனு சாஸ்திரம் ஆங்கில மொழி பெயர்ப்பை (வெண்டி டோனிகர் மற்றும் பிரியன் கேஸ்மித் இணைந்து மொழி பெயர்த்து, பென்குயின் பதிப்பகம் வெளியிட்ட நூல்) முழுமையாகப் படித்ததாக குறிப்பிட்டுள்ள அவர், 9ஆவது அத்தியாயத்தில் பெண்களை இழிபடுத்தும் ‘ஸ்மிருதிகள்’ இடம் பெற்றிருப்பதை பட்டியலிட்டுள்ளார். தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. முன்னோடிகள் மனுஸ்மிருதியைப் பாராட்டியுள்ளதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். இது பற்றி கட்டுரையில் இடம் பெற்றுள்ள கருத்துகளின் சுருக்கமான தமிழ் வடிவம்:

- பா.ஜ.க.வின் தமிழ்நாடு தலைவர் முருகன் மனு ஸ்மிருதி பற்றி குறிப்பிடும்போது அது **குழப்பமானது** (illusion) என்று கூறுகிறார். ஆனால், ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த வரும், ‘பஞ்ச் ஆப் தாட்ஸ்’ (Bunch of thoughts) என்ற சித்தாந்த நூலை உருவாக்கித் தந்தவருமான எம்.எஸ். கோல்வாக்கர் அப்படி கூறவில்லை. “மனித சமூகத்துக்கு அறிவுக் கூர்மையான சட்டத்தை முதன்முதலாக வகுத்துத் தந்தவர் மனு என்று பாராட்டுகிறார் (Manu, the first greatest and the widest law giver to mankind).

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜெர்மன் தத்துவவியலாளர் நீட்சே மனுவைப் பற்றி இவ்வாறு புகழ்கிறார்: “ஆரியர்களுக்கான சான்றாதாரம் மனுசாஸ்திரம் புரோகிதர்கள் வேதத்தின் அடிப்படையில் ஒழுக்கமுடன் நடந்து கொள்வதற்கான வழிகாட்டி. முன்னோர்கள் உருவாக்கிய ஜாதிய முறையின் சிறப்புகளைப் பேசுவது; மதம் பற்றிய என்னுடைய கருத்தாக்ககத்தை செழுமைப் படுத்தியதோடு முழு வடிவம் தந்ததும் மனு சாஸ்திரம் தான்” என்று கூறுகிறார் நீட்சே. ஆரிய இனப் பெருமை பேசிய ஜெர்மன் தத்துவவியலாளர் இனவெறி பேசிய நாஜிக்களால் கொண்டாடப்பட்டவர்.

‘இந்துத்துவா’ என்ற அரசியல் கருத்தை உருவாக்கிய சாவர்க்கர் மனுஸ்மிருதி பற்றி இவ்வாறு கூறுகிறார்:

“வேதத்துக்குப் பிறகு மிகவும் வணங்கப்படக் கூடிய நூல் மனுஸ்மிருதி தேசத்தை ஆன்மிகம் மற்றும் புனிதப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு அடிப்படையாக இருப்பது மனுஸ்மிருதி.” (Manusmirithi, the scripture that is most worshippable after the Vedas... the basis of its spiritual and devine march of the nation) - இது சாவர்க்கர் கருத்து.

‘டைம்ஸ் ஆப் இந்தியா’ இணையத்தில் மனுஸ்மிருதி பற்றிய தொடர் கட்டுரைகளை 2017ஆம் ஆண்டு வெளியிட்டது. அதில் ஆர்.எஸ்.எஸ். முன்னணி அமைப்பான ‘சன்ஸ்கார் பாரதி’ (Sanskar Bharathi) அமைப்பின் தலைவரான சஞ்சீவ் ஷப்லோக் (Sanjeev Sabhlok) என்பவர் ஒரு கருத்தை பதிவு செய்தார். மனுஸ்மிருதியில் திருத்தங்களைக் கொண்டு வரும் முயற்சிகளில் ஆர்.எஸ்.எஸ். இறங்கியுள்ளது. இந்து சாஸ்திரங்களை எதிர்த்துப் பேசுகிறவர்கள் மனுஸ்மிருதியில் இடம் பெற்றுள்ள தீண்டப்படாத தலித் மற்றும் பெண்களுக்கு எதிரான பகுதிகளை எடுத்துக் காட்டுவதா? அவைகளை ஆர்.எஸ்.எஸ். திருத்தி மாற்றியமைக்க இருக்கிறது” என்று பதிவு செய்துள்ளார்.

மனுஸ்மிருதி குழப்பமானது மாயை என்று பா.ஜ.க. தலைவர் முருகன் கூறுகிறாரே; அந்தக் குழப்பதில் எப்படித் திருத்தங்களை செய்யப் போகிறார்கள்? சாவர்க்கர், வழிபடக்கூடியது மனுஸ்மிருதி என்று கூறிய பிறகு, அதைத் திருத்தி அமைக்கும் உரிமையை ஆர்.எஸ்.எஸ்.சுக்கு யார் கொடுத்தார்கள்? இதற்கு ஆர்.எஸ்.எஸ். காப்பீட்டு உரிமை வாங்கி வைத்திருக்கிறதா?

மனுஸ்மிருதியை இந்த காலத்தில் நியாயப் படுத்தவே முடியாது என்பது பா.ஜ.க.வுக்கும் ஆர்.எஸ்.எஸ்.சுக்கும் நன்றாகவே தெரியும். இந்த நிலையில் மனுஸ்மிருதிக்கு ஆதரவாகப் பேசி குஷ்பு பா.ஜ.க.வுக்குள் நெருக்கடிகளை உருவாக்கியிருக்கிறார் என்பதுதான் உண்மை.

இவ்வாறு ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ எழுதி யிருக்கிறது.

## பொருளியல் ஆய்வாளர் ஜெயரஞ்சன் விளக்கம் (2)

# வேறு மாநிலங்களில் இல்லாத தமிழகத்தின் கட்டமைப்பு வளர்ச்சிகள்

***திராவிட விழுதுகள் சார்பில் கோவையில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழகப் பொருளாதாரம் கடந்த 50 ஆண்டுகளில் வளர்த்தெடுக்கப்பட்ட வரலாறுகள் குறித்து பொருளியல் ஆய்வாளர் ஜெயரஞ்சன் ஆற்றிய உரையின் தொடர்ச்சி:***

அடுத்ததாக மீதமுள்ள 40 விழுக்காடு மக்கள் கிராமப்புரங்களில் வசித்து வருகின்றனர். அவர்களிலும் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழக்கூடிய மக்களின் எண்ணிக்கை தினம்தோறும் குறைந்து கொண்டே வருகிறது. கிராமப்புறத்தில் இருப்பவர்கள் ஏன் விவசாயத்தை நம்பி இல்லையென்றால் விவசாயமும் பார்ப்பார்கள் அடுத்து வேறு ஒரு தொழிலும் ஈடுபட்டு வாழக் கூடியவர்களாக இருப்பார்கள். விவசாயத்தை மட்டுமே கிராமப்புறங்களில் நம்பி இல்லை. சென்ற வருடத்தில் ஒரு கணக்கெடுப்பு எடுத்திருக்கிறார்கள். அதன்படி கிராமப்புறங்களில் வசிக்கக் கூடியவர்களின் வருமானம் 100 ரூபாய் என்றால் அதில் 30 ரூபாய் தான் வேளாண் துறையிலிருந்து வருகிறது. மீதமுள்ள 70 ரூபாயில் வேறு தொழில்களில் அல்லது வேலைகளில் இருந்து வருகிறது. கிராமப்புறத்திலேயே இப்படியான வருமானம் தான் வருகிறது. நான் முன்கூட்டியே கூறியதை போல் அதிகமான மக்கள் கிராமப் புறங்களில் இருந்து நகர்புறத்திற்கு வந்துவிட்டார்கள். மற்றொரு புறம் கிராமத்திலிருப்பவர்கள் கிராமங்களையே நகரங்களாக்கி கொண்டிருக்கிறார்கள். கிராமங்கள் நகரங்களாகிக் கொண்டிருக்கிறதென்றால் வெறும் கட்டிடங்களால் அல்ல. வாழ்க்கை முறையினால். அதனால் தான் தமிழ் நாட்டில் பயிர் பொய்த்துப் போய்விட்டதென்றால் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை மிக மிக குறைவாக உள்ளது. கர்நாடகா, ஆந்திரா, மகராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் ஆயிரக்கணக் கானவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மிக சொற்பமான அளவில் தான் நடைபெறும். அதற்கான காரணமும் மிக மிக அதிகமாக கடன்பட்டவர்கள் தான் அப்படி தற்கொலை செய்து கொள்வார்கள் தமிழகத்தில். இதற்கான காரணம் என்ன? அது இரண்டாவது பகுதியில் சொல்கிறேன்.

அடுத்ததாக சேவைத் துறை (Service Sector). கணக்கெடுப்புத் துறையில் ஆரம்பத்தில் வேளாண் துறை பெரியதாக இருந்தது அடுத்து தொழில் துறை வருகிறது அடுத்து தான் சேவைத் துறை வருகிறது. உலகளவில் பெரும்பாலான மக்கள் சமுதாயம் வேளாண் சமுதாயமாக இருந்து அதற்குப் பின் தொழில் சமுதாயமாக மாறி 300 வருடங்கள் கடந்து அதற்குப் பின் தான் சேவைத் துறைக்கு வந்தார்கள். இந்தியா போன்ற மூன்றாம் தர நாடுகள் என்ன செய்துவிட்டார் களென்றால் தொழில் துறையில் போதுமான வளர்ச்சியடையாமல் 50 வருட காலங்களிலேயே நேரடியாக சேவை துறைக்குள் நுழைந்து விட்டார்கள். சேவைத்துறைக்கு சென்றது தவறில்லை ஆனால் சேவை தான் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பு செலுத்துகிறது. சாதாரணமாக ஒரு தரவைப் பார்ப்போம்.

ஒரு மாநிலத்தில் வேளாண் துறையின் பங்களிப்பு என்ன ? நாளுக்கு நாள் சுருங்கிக் கொண்டே போகிறது. சுருங்குகிறதென்றால் உற்பத்தியில் இல்லை. உற்பத்தி குறைந்தால் நமக்கு உணவில்லாமல் போய்விடும். உற்பத்தி குறையவில்லை. மாறாக மற்ற தொழில் துறையின் வளர்ச்சி அதிகமாகியுள்ளது. அதனால் வேளாண் துறை சுருங்கியுள்ளது. சின்னக்கோடு ஆகிவிட்டது பக்கத்தில் பெரிய கோடு வந்ததால். எது பெரிய கோடு என்றால் 'சேவைத் துறை' பெரிய கோடாக உள்ளது. சேவைத் துறை புதிய புதிய வாய்ப்புகளைத் திறந்து விடுகிறது. அந்த வாய்ப்புகளைப் பிடித்து முன்னேறிச் செல்லும் திறன் நம்மிடம் இருந்ததால் அதனுடைய பலனை நாம் அனுபவிக்க முடிந்தது. இது சேவைத் துறையால். ஒட்டுமொத்த பொருளாதாரம் என்று பார்த்தால் முதலில், இந்திய பொருளாதாரத்தில் தமிழகம் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரம், இரண்டாவது பரந்துபட்ட வளர்ச்சியடைந் திருப்பது, மூன்றாவது வேளாண் துறையைச் சார்ந்திருப்பவர்கள் மிகக் குறைவான ஆட்கள். நான்காவதாக சேவைத்துறை மிக முக்கியமான துறையாக வளர்ந்துகொண்டுள்ளது. இவையெல்லாம் முக்கியமான கூறுகள். அய்ந்தாவது ஒரு மாநிலத்தில் நகரங்கள் என்று பார்த்தால் ஒன்று அல்லது இரண்டு தான் இருக்கும். மற்றவை களெல்லாம் கிராமங்களாக இருக்கும். தமிழகத்தில் பார்த்தால் பெரு நகரங்களே 5 நகரங்கள் இருக்கும். அடுத்து நடுத்தரமான நகரங்கள் 50 இருக்கும். சிறு நகரங்கள் 300 இருக்கும். அதன்பின் தான் கிராமம். இதனால் வளர்ச்சி எப்படிப் பரவலாகும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேற்கு வங்கத்தை எடுத்துக் கொண்டோமானால், கல்கத்தாவிற்குத் தான் போக வேண்டும். நகரம் என்றாலே கல்கத்தா தான். மகராஷ்டிராவில் மும்பை அல்லது பூனா. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் 40 கிலோமீட்டருக்கு ஒரு நகரம் இருக்கும். வாழ்வாதாரத்திற்கான வழிகள் இருக்கும். இந்தியாவிலேயே மிக அதிகமாக நகரமயமாகக்கூடிய நகரமென்றால் அது திருப்பூர் தான் மிக வேகமாக வளர்ச்சி அடையும் நகரங்களும் தமிழகத்தில் அதிகம். இதை வளர்ச்சி பரவலாகச் சென்றடைந்ததற்குக் காரணம் முன்னமே கூறியதை போல 30 ரூபாய் பணம் வேளாண் துறையில் என்றால் மீதமுள்ள 70 ரூபாய் பணம் இது போன்ற நகரங்களுக்கு வேலைக்குச் சென்று திரும்புவது மூலமாகத் தான்.



> நான் தற்போது பேசுவது ஒரு கட்சியின் மேடைப் பேச்சு அல்ல. நான் கூறிய அனைத்து தகவல்களுக்கும் ஆதாரங்கள் உள்ளன. அனைத்துக்குமான புள்ளி விவரங்களும் உள்ளன.

அனைவரும் நகரங்களுக்கு குடிபெயர்ந்து வருவது இல்லை. அருகில் உள்ள நகரங்களுக்குச் சென்று திரும்புவதன் மூலம் அவர்கள் வருமானத்தை ஈட்டு கிறார்கள். அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள்? நூறு வகையான வேலைகளை அவர்கள் செய்கிறார்கள். அவை என்ன என்ன வேலைகள் என்று இதுவரை எந்த அரசாங்கத்திடமும் கணக்குகள் இல்லை. சாதாரணமாக கைப்பேசி பழுதுபார்க்கும் கடைகளை எடுத்துக்கொண்டோம் என்றால், ஒரு நகரத்தில் குறைந்தது 10 கடைகள் இருக்கும். அந்த கடைகளில் குறைந்தது 20 நபர்களுக்கு மேல் வேலை செய்வார்கள். அது போல நூற்றுக் கணக்கான தொழில்கள் தமிழகத்தில் உள்ளன. இவையனைத்தும் எப்படி சாத்தியமானது என்றால் நகர்மயமாதல் மற்றொரு புறம் இதுபோல சிறு நகரங்கள் வளர்ச்சியடைவது. இந்த சிறு நகரங்களால் ஒரு பொருளாதார முறையும் உருவாகிறது. இந்த பொருளாதாரம் சுழற்சியில் வெளிப்பட்டு அதுவே பூர்த்தியடைந்து (cater) மாற்றமடைந்துள்ளது. அதன் விளைவாக தமிழ்நாட்டில் தற்போது என்ன விளைவு ஏற்பட்டுள்ளது என்றால், தமிழ்நாட்டின் நகர்ப்புற முறை (urban pattern) இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. இந்த நகர்ப்புறத்தை எது நிலைநிறுத்துகிறதென்றால், நாம் மிகவும் கவனத்துடன் உருவாக்கிய போக்குவரத்து. இந்த போக்குவரத்தை 1968 இல் தேசியமயமாக்கியதும் ஒரு காரணம் தான். போக்குவரத்தை தேசியமயமாக்கி யதால், அனைத்து கிராமங்களும் நகரத்துடன் இணைக்கப்பட்டன. இவை 100% என்பது கிடையாது. 95 அல்லது 96 விழுக்காடு இருக்கும். இதை நீங்கள் எப்படி புரிந்து கொள்ள வேண்டுமென்றால், மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஏனென்றால் இந்திய ஒன்றியத்தினுள்தானே நாம் இருக்கிறோம். அய்ரோப்பாவுடன் ஒப்பிட்டுவிட்டு அதுபோல இல்லையே என்று கேட்டால் அது தவறானது. இந்திய ஒன்றியத்திற்குள் உள்ள மற்ற மாநிலங்களைஒப்பிட்டுப் பார்த்தோமே யானால் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சி என்னவென்று புரியும்.

> **நான்கு விதமான மருத்துவமனைகளை தமிழ்நாடு உருவாக்கியுள்ளது. அந்த நான்கு வகையான மருத்துவமனைகளும் இயங்கிக்கொண்டே உள்ளன.**

குஜராத் தான் இந்தியாவின் மாடல் என்று கூறி தற்போது ஒருவர் பிரதமராகியுள்ளார் ! இரவு நேரத்தில் கோயம்புத்தூர் பேருந்து நிலையம் சென்று நீங்கள் எந்த மாவட்டத் தலைநகரத்திற்கும் பயணம் செய்யலாம். சென்னையிலிருந்து, நாகர்கோவில் வரை கூட நீங்கள் சென்றுவிடலாம். இரவு பயணம் செய்து காலை விடியும் முன் நீங்கள் சென்றுவிடலாம். அதற்குண்டான போக்குவரத்து வசதி தமிழ்நாட்டில் உள்ளது. எப்படி இரவில் உள்ளதோ அதே அளவில் பகலிலும் உள்ளது. ஆனால் இது போன்ற வசதி குஜராத்தில் இல்லை. அகமதாபாத்தில் இருந்து 'வதோதரா' செல்ல இரண்டே இரண்டு பேருந்துகள் தான் இரவு நேரங்களில் இருக்கும். அது தான் அங்கே இருக்கக் கூடிய பொதுப் போக்குவரத்தின் நிலை. பேருந்துகள் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருப்பது போன்ற 'சாலை போக்குவரத்து' இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. நான் தற்போது பேசுவது ஒரு கட்சியின் மேடைப் பேச்சு அல்ல. நான் கூறிய அனைத்து தகவல்களுக்கும் ஆதாரங்கள் உள்ளன. அனைத்துக்குமான புள்ளிவிவரங்களும் உள்ளன.

தற்போது ஒன்றிய அரசு ஒரு திட்டத்திற்கு பல்லாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. அது என்ன திட்டம் தெரியுமா? 'மின்சாரம் இல்லாத கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கும் திட்டம்'. எப்போது 2020 இல் அறிவித்திருக்கிறது. தமிழ் நாட்டில் மின்சாரம் இல்லாத கிராமம் என்று எப்போது மாற்றினோம்? 1974 இல் தமிழ்நாடு முழுவதும் மின்சாரமில்லாத கிராமங்களே இல்லை என்ற திட்டத்தை செயல்படுத்தினோம். நாம் எவ்வளவு உயரத்தை அடைந்துள்ளோம் என்பதை ஒப்பிட்டுப் பாருங்கள். எனவே, 50 வருடங்களாக தமிழகம் எந்த வளர்ச்சியும் அடையவில்லை என்று கூறுபவர்களை என்ன செய்ய வேண்டும்? அவர்களிடம் இந்த புள்ளிவிவரங்களைக் காட்டி கேள்விகளை நாம் கேட்க வேண்டும்.

நான் இதுவரை கூறியது கட்டமைப்புகள் பற்றி. அடுத்ததாக 'சமூகம்' சார்ந்தும் தமிழ்நாடு பல வளர்ச்சிகளை அடைந்துள்ளது. அதில் நான் மிக மிக முக்கியமாக பார்க்கக்கூடியது 'இட ஒதுக்கீடு'. ஏனென்றால் இந்தியாவில் எங்கும் இல்லாத அளவில் தமிழகத்தில் தான் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை தொடர்ந்து வெற்றிகரமாக நிறைவேற்றி வந்துள்ளது. அதுமட்டுமில்லாமல் இட ஒதுக்கீடு வருவதற்கே முன்மாதிரியாக இருப்பதும் தமிழகம் தான். இந்திய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டு வந்ததும் தமிழ்நாடுதான்.

தமிழ்நாட்டில் உள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. அதிகமான மருத்துவக் கல்லூரிகளை அமைத்து அதிகமான மருத்துவர்களை உருவாக்கியுள்ளது தமிழ்நாடு. எனவே, கொரோனா போன்ற பெருந்தொற்று ஏற்படும் போது அதை சமாளிக்கும் அளவிற்கான கட்டமைப்புகள் தமிழ்நாட்டை விட வேறு எந்த மாநிலத்திற்கும் கிடையாது. மற்றொன்று 'பொது சுகாதாரம்', பொது சுகாதாரத்தை தமிழ்நாடு இன்றளவும் கட்டுப்பாடாகவும் கவனமாகவும் இயக்கி வருகிறது. மற்ற மாநிலங்களில், காப்பீடு (insurance )களை கொடுத்து பொது சுகாதாரத்தை ஒன்றுமில்லாதவையாக மாற்றிவிட்டார்கள். காப்பீடுகளை கொடுத்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறும்படி செய்து விட்டார்கள். தமிழ்நாட்டில் எந்த அரசு மருத்துவமனைக்குச் சென்றாலும் பெரும்பாலான வியாதிகளுக்குத் தேவையான மருந்துகளை இலவசமாக வாங்க முடியும். வேறு எந்த மாநிலத்திலும் இது போன்று கிடையாது. தமிழ்நாடு மருத்துவ கழகத்தின் முன்னுதாரணத்தை இதுவரை எந்த மாநிலத்தாலும் பின்பற்ற முடியவில்லை. அரசு மருத்துவமனைக்குச் சென்று 'சிறுநீரகம்' வேலை செய்யவில்லையென்றால் அதற்குத் தேவையான மருந்துகளை வழங்குவார்கள். மருத்துவர் உங்களை சோதனை செய்த பின் உங்களுக்கான மருந்துகளை பரிந்துரைப்பார். அந்த மருந்துகளை நீங்கள் மாதம் ஒரு குறிப்பிட்ட தேதிகளில் சென்று வாங்கி வரலாம். இது போன்ற ஒரு அமைப்பு இந்தியாவில் எங்கும் கிடையாது. ஆனால் சிலர் கேவலமாக, 'மருத்துவர்கள் இல்லை, சரியாக கவனிப்பதில்லை' என்று அரசு மருத்துவ மனைகளை விமர்சனம் செய்கிறார்கள். உலகமே இந்த 'மாதிரியைப்' (Model) பார்த்து பாராட்டி பேசிக் கொண்டுள்ளது. உலகமே வியந்து பாராட்டுகிறது என்று சோ ராமசாமி எழுதுவாரா ? எழுதினாரா?

(தொடரும்)

# அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜைகளா? ஜலகண்டாபுரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்




சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் 30.10.2020 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில், ஜலகண்டாபுரம் பேருந்து நிலையம் அருகில் அரசு அலுவலகங்கள் மற்றும் காவல் நிலையங்களில் அரசாணைக்கு எதிராக ஆயுதபூஜை நடத்தியதை கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி கிருஷ்ணன் தலைமை வகித்தார். கண்டன ஆர்ப்பாட்டத்தில் சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயலாளர் சி.கோவிந்தராஜ், மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் ஆர்ப்பாட்டத்தை விளக்கி கண்டன உரை நிகழ்த்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் கழக தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல் மற்றும் மேட்டூர் நகரம், மேட்டூர் RS., ,நங்கவள்ளி ஆகிய பகுதிகளில் இருந்து தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

பொதுமக்களுக்கு ஆர்ப்பாட்டத்தை விளக்கி துண்டறிக்கைகள் வழங்கப்பட்டது. நிறைவாக நங்கவள்ளி திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் இராஜேந்திரன் நன்றியுரை கூற ஆர்ப்பாட்டம் நிறைவடைந்தது.

## வினா – விடை

- 24 மணி நேரத்துக்கு முன் கொரானா சோதனை மருத்துவச் சான்றிதழ் பெற்றிருந்தால் மட்டுமே அய்யப்பனை தரிசிக்க அனுமதி.
  **– சபரிமலை நிர்வாகம்**

  சான்றிதழை கோயில் அர்ச்சர்கள் தந்தால் போதும் தானே?

- தஞ்சையில் தமிழ்நாடு தினம்கொண்டாடிய 41 பேர் கைது. **– செய்தி**

  தேவை தானா? ‘இந்துஸ்தான் தினம்’ கொண்டாடிப் பாருங்கள்! காவல் துறையும் கைகோர்த்திருக்கும். மோடி ‘மான்கிபாத்’ பேச்சிலும் புகழ்ந்து தள்ளியிருப்பார்.

- வில்லியம் ஜோன்ஸ் என்ற ஆங்கிலேய அதிகாரி எழுதியதுதான் ‘மனுஸ்மிருதி’. இந்துக்களுக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.
  **– பா.ஜ.க செய்தி தொடர்பாளர் திருப்பதி நாராயணன்**

  பிரிட்டிஷ்காரர்களுக்கு மட்டும் ஜோன்ஸ் எழுதி, ‘சுதந்திர’த்துக்குப் பிறகு கையோடு விமானத்தில் எடுத்துக் கொண்டு போய் இலண்டன் மியுசியத்தில் வைத்து விட்டான். பிறகு இஸ்லாமியர்கள் அதை இலண்டன் மியுசியத்திலிருந்து திருடினார்கள். ‘பிரிட்டிஷ்’ என்று வரும் வரிகளை மட்டும் ‘பிராமினிஷ்’ என்று மாற்றி இந்தியாவில் திணித்து இஸ்லாமிய இராஜ்யத்தை உருவாக்கி விட்டார்கள். இதுதான் வரலாறு! இவை எல்லாத்துக்கும் நாராயணனிடம் ஆதாரங்கள் இருக்குது! நாமும் நம்புவோம்!

- தேர்தலில் மக்களுடன்தான் கூட்டணி வைப்போம். **– கமலஹாசன்**

  அதில் மக்களுக்கு எவ்வளவு தொகுதி? மக்கள் இல்லாத மய்யத்துக்கு எத்தனை தொகுதி என்பதையெல்லாம் தெளிவாக புரியும்படி கூறுங்க சார்?

- என் பெயரில் வந்த அறிக்கையை எழுதியது நான் அல்ல; ஆனால் அதில் இடம் பெற்றுள்ள என் உடல்நிலை பற்றிய கருத்துகள் முற்றிலும் உண்மை.
  **– ரஜினிகாந்த்**

  இதுகூட நல்லாத்தான் இருக்கு. அடுத்து, உங்க கட்சிப் பெயர், கொடி பற்றி எவராவது ஒரு அறிக்கை விடுவது நல்லது. அறிக்கை என்னுடையது அல்ல; ஆனால் கட்சிக்குப் பெயரும் கொடியும் வேண்டும் என்ற கருத்து மட்டும் உண்மை என்று ஒரே போடு போட்டுடலாம்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அதே வேளை, கர்நாடக அரசு தனது கர்நாடக நாளை அரசு விழாவாக பொதுமக்களின் பங்களிப்போடு கர்நாடக கொடியேற்றி மகிழ்வோடு கொண்டாடியிருக்கின்றனர். பாஜகவின் அமைச்சரே கர்நாடக கொடியினை ஏற்றியிருக்கிறார். அரசியலமைப்பு சட்டப்படி கர்நாடகாவில் குற்றமாக கருதப்படாத ஒன்று தமிழ்நாட்டில் மட்டும் குற்றமாக கருதப்படுகிறது என்றால், அரசியலமைப்பு சட்டம் தமிழ்நாட்டிற்கு மட்டும் தனித்த முறையில் செயல்படுமா? கன்னடர்களுக்கு கிடைக்கும் உரிமை, அதே இந்திய ஒன்றியத்தில் தமிழர்களுக்கு மறுக்கப்படுகிறது என்றால், இந்திய ஒன்றியம் தமிழர்களுக்கென குற்றப்பரம்பரை சட்டத்தை வைத்துள்ளதா?

இந்திய ஒன்றிய அரசின் பாஜக அரசும், தமிழ்நாட்டின் அதிமுக அரசும் தமிழர்களுக்கு எதிராக செயல்படுவதையே அவற்றை இன்றைய செயல்பாடுகள் காட்டுகிறது. பாஜக- அதிமுக அரசுகளின் அடக்குமுறையை தமிழர்களிடையே அம்பலப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதை நாம் உணர்வோம். தோழர் பொழிலன் உள்ளிட்ட 15 தோழர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை உடனடியாக திரும்பப்பெற்று, அவர்களை தமிழ்நாடு அரசு உடனடியாக விடுவிக்க வேண்டுமென திராவிடர் விடுதலைக் கழகம் கோரிக்கை விடுக்கிறது.

# ஒடிசா வழிகாட்டுகிறது! ஜாதி மறுப்பு திருமணம் செய்வோருக்கு ரூ.2.5 லட்சம் பரிசு

ஜாதி மறுப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் வகையில் கலப்பு திருமணம் செய்யும் தம்பதியருக்கு2.5 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று ஒடிஷா அரசு அறிவித்துள்ளது.

ஒடிசா மாநிலத்தில் முதல்வர் நவீன் பட்நாயக் தலைமையில் பிஜு ஜனதா தள் கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகிறது. நவீன் பட்நாயக் அரசு கலப்பு திருமணங்களை ஊக்குவித்து வருகிறது. கடந்த 2007ஆம் ஆண்டு ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்வோருக்கான தொகை 10 ஆயிரத்தில் இருந்து 50 ஆயிரம் ரூபாயாக ஒடிஷா அரசு உயர்த்தியது. அதனைத் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டு சன்மானம்1 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இந்த நிலையில் இந்த ரூ.2.5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக Sumangal.odisha.gov.in என்ற பிரத்யேக இணையதளமும் தொடங்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் பதிவு செய்துகொள்ள வேண்டும். இது எஸ்.டி மற்றும் எஸ்.சி மேம்பாடு, சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை சார்பில் உருவாக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற திருமணங்கள் சமூக நல்லிணக்கத்தை பேணும் என்று முதல்வர் நவீன் பட்நாயக் தெரிவித்துள்ளார். இதில், இந்து மேல் சாதி மற்றும்இந்து தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு இடையில் திருமணம் நடைபெற வேண்டும். இந்தத் திருமணம் இந்து திருமணச் சட்டம் 1955இன் படி செல்லுபடியாக வேண்டும். இந்தப் பரிசு திருமணமான தம்பதிக்கு ஒருமுறை மட்டுமே வழங்கப்படும். முதல்முறை திருமணம் செய்து கொள்பவர்களுக்கு மட்டுமே அரசின் தொகை கிடைக்கும். கணவன் இறந்து விதவையான மனைவி அல்லது மனைவி இறந்து தனிமையில் வாழும் கணவன் மறுமணம் செய்து கொண்டால் இத்தகைய நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோடி அறிமுகப்படுத்திய ‘ஆரோக்கிய செயலி’ அரசுக்கு தெரியாதாம்

ஆரோக்கிய சேது செயலியை உருவாக்கியது யார் என்று தமக்கு தெரியாது என மத்திய மின்னியல் அமைச்சகம் அதிர்ச்சிகரமாக பதிலளித்துள்ளது.

கொரோனா பரவலை கண்காணிக்க மத்திய அரசு, ‘ஆரோக்கியசேது’ என்ற செயலியை அறிமுகம் செய்தது. இந்த செயலி, அருகில் வரும் நபர் கொரோனாவால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் அது நமக்கு எச்சரிக்கை தரும் என்று கூறப்படுகிறது. ஆரோக்கிய சேது செயலி குறித்து குற்றசாட்டுகள் எழுந்த போது அதனை குறித்து தகவலறியும் உரிமை சட்டத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டன. இதையடுத்து Https://aarogyasetu.gov.in/ என்ற வலைத்தளம் gov.in என்ற டொமைன் பெயருடன் எவ்வாறு உருவாக்கப் பட்டது என்பது குறித்து எழுத்துப் பூர்வமாக விளக்குமாறு மத்திய தகவல் ஆணையம் சிபிஐஓ, தேசியதகவல் மையத்தை கேட்டுக்கொண்டது.

இதற்கு மத்திய மின்னியல் அமைச்சகம் அளித்த பதிலில், யாரால் இந்த ஆரோக்கிய சேது செயலி உருவாக்கப்பட்டது என்பது தெரியாது என தெரிவித்தது.இதையடுத்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 20-ன் கீழ் உரிய பதில் அளிக்காத சிபிஐஓக்கள், மின்னணு அமைச்சகம், தேசிய தகவல் மையம், நெஜிடி ஆகியவற்றுக்கு ஏன் அபராதம் விதிக்கக்கூடாது என விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது மத்திய தகவல் ஆணையம். மேலும் ஆரோக்கிய சேது இணையதளம் குறித்து தேசிய தகவல் மையத்திடம் எந்த தகவலும் இல்லை என்பது எப்படி என்பதை விளக்கவும் மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட் டுள்ளது. இவ்விவகாரம் குறித்து, அடுத்த மாதம் சிபிஓக்கள் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

## ‘ஜே.இ.இ.’ தேர்வில் முதலிடம் பெற்றவர் நடத்திய மோசடி அம்பலமானது

அய்.அய்.டி. போன்ற தொழில்நுட்பக் கல்லூரிக்கான ‘ஜே.இ.இ.’ நுழைவுத் தேர்வில் முதலிடம் பெற்ற மாணவர் ஆள் மாறாட்டம் செய்து எழுதியது கண்டறியப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜேஇஇ மெயின் தேர்வில் ஆள்மாறாட்டம்செய்த விவகாரத்தில் அசாமில் மாணவர், அவரது தந்தை உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டனர். செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜேஇஇ மெயின் தேர்வை 6.35 லட்சம் மாணவர்கள் எழுதினர். தேர்வு முடிவுகள் செப்டம்பர்11 நள்ளிரவில் வெளியாகின. இதில் 24 மாணவர்கள் 100 சதவீத மதிப்பெண் பெற்றிருந்தனர்.ஜேஇஇ மெயின் தேர்வில் முதல் 2.45 லட்சம் இடங்களைப் பிடிக்கும் மாணவர்கள் ஜேஇஇ அட்வான்ஸ்ட் தேர்வை எழுதத் தகுதிபெற்றவர்கள் ஆவர். இத்தேர்வில் தேர்ச்சி பெறுவதன் மூலம் ஐஐடிக்களில் மாணவர்கள்பொறியியல் படிப்புகளைப் படிக்க முடியும்.

இந்நிலையில், அசாமில் ஆள்மாறாட்டம் செய்து ஜேஇஇ மெயின் தேர்வில் 99.8 சதவீத மதிப்பெண் பெற்றதாகக் கூறப்படும் மாணவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக மித்ரதேவ் சர்மா என்பவர் காவல்துறையிடம் அளித்த புகாரில் கவுகாத்தி தேர்வு மையத்தில் சம்பந்தப்பட்ட தேர்வருக்குப் பதிலாக செப்டம்பர் 5 அன்றுவேறொரு மாணவர் வந்து தேர்வெழுதிய தாகக் கூறப்பட்டுள்ளது. இதற்குத் தேர்வு மையத்தில் உள்ள அதிகாரியும் உடந்தை யாக இருந்ததாக குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாகக் காவல்துறை, சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்துள்ளது. விசாரணையில் தேர்வரின் தந்தையும் (மருத்துவர்) 3 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். தேர்வர், தான் செய்த மோசடியை நண்பர் ஒருவரிடம் போனில் பகிர்ந்துள்ள ஆடியோ கிடைத்துள்ளது.இந்த மோசடியில் கவுகாத்தியில் உள்ள தனியார் பயிற்சி மையத்துக்கும் தொடர்பு உள்ளதாகக் கூறப்படுகிறது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 06th November 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN